**FIRST INFORMATION REPORT** — **TAMIL NADU POLICE** — INTEGRATED INVESTIGATION FORM-I

**Under Section 173 BNSS**

முதல் தகவல் அறிக்கை
(Under Section ~~154 Cr.P.C.~~)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8165170

1. District : Thiruvallur
மாவட்டம்
PS: Vigilance & Anti-Corruption
காவல்நிலையம்
Year: 2025
ஆண்டு
FIR No.: 2/AC/2025/TVL
மு.த.அ. எண்
Date: 19/02/2025, at 10.00 hrs.
நாள்

2. (i) Act சட்டம்: The Prevention of Corruption (Amendment) Act, 2018
Sections பிரிவுகள்:
(ii) Act சட்டம்:
Sections பிரிவுகள்: U/s. 7
(iii) Act சட்டம்:
Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day :
குற்ற நிகழ்வு நாள்
Date from : 17/2/2025
நாள் முதல்
Date to : –
நாள் வரை
Time Period :
நேர அளவு
Time from : at about 19.30 hrs.
நேரம் முதல்
Time to : –
நேரம் வரை

Seen [illegible] 19/2/25
[illegible] 19/2/25

(b) Information Received at PS. Date : 19/2/2025
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்
Time : at about 09.00 hrs.
நேரம்
(c) General Diary Reference : Entry No(s) 19/2/2025
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்
Time : at 10.00 hrs.
நேரம்

4. Type of Information : Written/ Oral : Typed.
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: South-East- about 84 kms.
குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
Beat Number : –
முறைக் காவல் எண்
(b) Address : Poonamallee Taluk Office, Thiruvallur District.
முகவரி
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : –
District : –
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. K. Karthik.
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்
(b) Father's/ Husband's Name : Kasi
தந்தை / கணவர் பெயர்
(c) Date / Year of Birth : 39 years
நாள் / பிறந்த ஆண்டு
(d) Nationality : Indian
நாட்டினம்
(e) Passport No. : –
வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : –
வழங்கப்பட்ட நாள்
Place of Issue : –
வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : painter
தொழில்
(g) Address : No: 14, Selva Lakshmi Nagar, Perumal Agaram Thiruverkadu, Chennai-77.
முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

Tr. Sundar, Head Quarters Deputy Tahsildar, Poonamallee Taluk Office, Thiruvallur District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

– by the Complainant –

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

Demanded Rs.10,000/- by the accused.

10. Total value of properties stolen / Involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. If any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Submitted:- Today 19/2/2025 at 09.00hrs, I present in my Vigilance Office, One Tr. K. Karthik, S/o. Kasi, No. 14, Selva Lakshmi Nagar, Perumal Agaram, Thiruverkadu, Chennai-77 appeared before me and lodged a complaint before me against the Head Quarters Deputy Tahsildar Tr. Sundar at Poonamallee Taluk Office, Thiruvallur District. It as follows:-

[the FIR content continues in the separate sheet....]

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed W.S. TAMIZHARASI Rank INSPECTOR to take up the Investigation / Refused Investigation / transferred to PS......VAC, THIRUVALLUR...........on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ........—........ பதவி ....—.......... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..........—.......... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

K. Karthick 19/02/2025

[signature] 19/2/2025

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer In-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court: 19/2/2025
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும் at 19.15 hrs.

Name: பெயர் [W.S. TAMIZHARASI],
Rank: நிலை INSPECTOR No. எண் .........
VAC, THIRUVALLUR.

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.2/AC/2025/TVL, U/s. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 continues . . .)**

பணிந்து அனுப்பப்படுகிறது அனுப்புநர், K.கார்த்திக், த/பெ. காசி, எண்.14, செல்வலட்சுமி நகர், பெருமாள் அகரம், திருவேற்காடு, சென்னை-77. பெறுநர், காவல் ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, திருவள்ளூர் மாவட்டம். ஐயா, நான், மேற்சொன்ன முகவரியில் என் மனைவி ரேவதி, 2 மகன்கள் மற்றும் எனது மாமியார் கன்னியம்மாள் ஆகியோர்களுடன் வசித்து வருகிறேன். நான் பெயின்ட்டராக வேலை செய்கிறேன். எனது மாமனார் திரு.ஏழுமலை அவர்கள் தரமணியிலுள்ள தோல் தொழில் நுட்பப் பயிலகம் என்ற தோல் சம்மந்தப்பட்ட துறையில் வாட்ச்மேனாக பணிபுரிந்து வந்தபோது கடந்த 28.04.2022-ந்தேதி இறந்துவிட்டார். மேற்படி எனது மனைவியுடன் பிறந்தவர்களில் அண்ணன் ராஜ்குமார் மற்றும் தம்பி சரவணகுமார் ஆகியோர்களில், அண்ணன் ராஜ்குமார் கடந்த 05.03.2024-ந்தேதி முதல் காணாமல் போய்விட்டார், அதுசம்மந்தமாக திருவேற்காடு காவல் நிலையத்தில் கடந்த 10.09.2024-ந்தேதி புகார் கொடுத்தும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டும் உள்ளது. மேலும், என் மனைவியின் தம்பி சரவணகுமார் திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார். தற்போது என் மாமனார் பணியின்போது இறந்துவிட்டதால் கருணை அடிப்படையில் அவரது வாரிசுகளில் என் மனைவி மட்டுமே உள்ளதால், அவருக்கு அவரது அப்பாவின் வேலையை கொடுக்குமாறு என் மாமியார் திருமதி.கன்னியம்மாள் அவர்கள் மனு கொடுத்தபோது, சில ஆவணங்களை பெற்றுவந்து தரவேண்டும் என்று கூறினார்கள். அந்த ஆவணங்களில் எங்கள் பகுதியின் வட்டாட்சியரிடம் ஒருங்கிணைந்த சான்றிதழ் ஒன்றும் பெற வேண்டும் என்று இருந்தது. எனவே மேற்படி சான்றிதழ் கேட்டு கடந்த 12.02.2024-ந்தேதி என் மாமியார் பெயரில் பூந்தமல்லி வட்டாட்சியருக்கு மனு கொடுத்தோம். அந்த மனு தொடர்பாக விசாரணைகளை முடித்து கடந்த 26.09.2024-ந்தேதி பூந்தமல்லி வட்டாட்சியர் அவரது கடித எண்.ந.மு.482/2024/அ8, நாள்- .09.2024 மூலம் கையொப்பம் செய்து கொடுத்தார்கள். அச்சான்றினை நாங்கள் மேற்படி எனது மாமனார் வேலை செய்த அலுவலகத்தில் கொடுத்தோம். ஆனால் அச்சான்றில் எனது மனைவியின் அண்ணன் ராஜ்குமார் தொலைந்த நாள், புகார் கொடுத்த நாள், உறுதிமொழி பத்திரத்தின் நாள் என அனைத்தும் முன்னுக்குப்பின் முரணாக உள்ளதாகவும், அதனை திருத்தி சரியான சான்றிதழையும், என் மாமியார் மற்றும் என் மனைவியின் உறுதிமொழிப்பத்திரத்தையும் அனுப்புமாறு கேட்டுக்கொண்டதன்பேரில் நாங்கள் மீண்டும் பூந்தமல்லி தாசில்தார் அலுவலகத்திற்கு சென்று மேற்படி விவரத்தை தெரிவித்து, அச்சான்றினை சரிசெய்து புதிய சான்றாக அளிக்குமாறு கேட்டும், பலமுறை சென்றும் எங்கள் வேலை முடியவில்லை. மேலும்,

**(FIR content continues to the next page...)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.2/AC/2025/TVL, U/s. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 continues . . .)**

அந்த வேலை பூந்தமல்லி தலைமையிடத்து துணை வட்டாட்சியர் திரு.சுந்தர் அவர்கள் சுருக்கொப்பம் செய்து வட்டாட்சியரிடம் கையொப்பம் பெற்றும் மற்றும் அலுவலக கோபுர சீல் வைத்தும் தரவேண்டும். ஆனால் அவர் என்னிடம் பணம் எதிர்பார்த்து தாமதப்படுத்தியுள்ளார் என்று பின்னர் தான் தெரிந்தது. அதன்பின் 17.02.2025-ந்தேதி காலை பூந்தமல்லி வட்டாட்சியர் அலுவலகத்திற்கு சென்று காலை முதல் காத்திருந்தபோது, மதியத்திற்கு மேல் திரு.சுந்தர் அவர்கள் என்னை அழைத்து, வட்டாட்சியர் என்னுடைய வருமானச்சான்றினை பார்க்க வேண்டும் என்று கூறுவதாகவும், அதை கொண்டுவந்து கொடுக்குமாறும் கூறியதால், மீண்டும் வீட்டிற்கு சென்று எடுத்துவந்து கொடுத்தேன். அதன்பின் மாலை 06.30 மணிக்குத்தான். திரு.சுந்தர் என்னை அழைத்து உங்கள் புதிய சான்றிதழில் வட்டாட்சியர் கையொப்பம் பெற்றுத்தர வேண்டுமானால் ரூ.15,000/- பணம் கொடுக்க வேண்டும் என்று தெரிவித்தார். நான் என் பெயின்ட்டிங் வேலையையும், அதன் வருமானத்தைப்பற்றியும், இந்த சான்றுக்காக அலைந்துக்கொண்டிருந்தது குறித்தும் தெரிவித்தபோது, ரூ.10,000/-ம் கொடுக்குமாறு கூறினார். அவ்வாறு அவர் கேட்ட பணத்தை கொடுத்துவிட்டால், அடுத்த நிமிடமே வட்டாட்சியரிடம் கையொப்பம் செய்து, கோபுர சீல் வைத்து தருகிறேன் என்று கூறினார். நான் என் குடும்ப சூழ்நிலையை எடுத்துக்கூறியும், திரு.சுந்தர் அவர்கள், நீ போய் பணத்துடன் வா. சர்ட்டிபிகேட்டை வாங்கிக்கொண்டு போ என்று கூறினார். அப்போது மாலை சுமார் 07.30 மணியிருக்கும், பின் நான் வீட்டிற்கு போய் என் மனைவி மற்றும் மாமியாரிடம் மேற்படி விவரத்தை தெரிவித்தேன். அவர்களுக்கும், எனக்கும் பூந்தமல்லி வட்டாட்சியர் அலுவலகத்தில் தலைமையிடத்து துணை வட்டாட்சியராக பணிபுரியும் திரு.சுந்தர் அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.10,000/-ம் தர விருப்பம் இல்லாததால், இன்று இந்த புகாரை தங்களிடம் கொடுக்கிறேன். நான் அவர் கேட்ட பணம் ரூ.10,000/-ஐ ரெடி பண்ணிக்கொண்டு வர காலதாமதம் ஆகிவிட்டது. மேலும் தாங்கள் எடுக்கும் சட்டப்படியான நடவடிக்கைக்கு எனது முழு ஒத்துழைப்பைக் கொடுப்பேன் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். இப்படிக்கு, **Sdxxx (K.கார்த்திக்)**, 19.02.2025.

**Honoured Sir,**

Received the above complaint on 19.02.2025 at 09.00 hrs and after getting proper permission from DVAC on this complaint, an enquiry is conducted in a discreet manner. Based on the outcome of the enquiry, the antecedents of the accused, the reputation of the

**(FIR content continues to the next page...)**

**(Contents of the F.I.R. in Thiruvallur V & AC, Cr.No.2/AC/2025/TVL, U/s. 7 of the Prevention of Corruption (Amendment) Act, 2018 continues . . .)**

accused and genuineness of the complainant are verified. Since, there is prima-facie made out to register a FIR on said complaint. Hence, I registered a case in Thiruvallur V&AC, Cr.No.2/AC/2025/TVL u/s. 7 of The Prevention of Corruption (Amendment) Act, 2018 on 19.02.2025 at about 10.00 hrs. **SdXXX (G.S.TAMIZHARASI),** Inspector of Police, Vigilance and Anti-Corruption, Thiruvallur.

The original complaint and FIR are sent to the court of Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge, Thiruvallur and the other copies to the concern officers of DVAC.

19/2/2025

**(G.S.TAMIZHARASI),**
**INSPECTOR OF POLICE**
**VIGILANCE & ANTI CORRUPTION**
**Thiruvallur - 602 001.**